தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சின்ன வெங்காயத்தின் விலை ஏற்றத்திற்கு வாய்ப்புகள் குறைவு

இந்தியாவில், சின்னவெங்காயம் உற்பத்தியில் தமிழ்நாடு பெரும் பங்குவகிக்கிறது. நாட்டின் சின்ன வெங்காய உற்பத்தியில் 90 சதவீதம் தமிழ்நாடு பங்களிக்கிறது. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரபிரதேசம் ஆகியவை சின்ன வெங்காயம் விளைவிக்கும் முக்கிய மாநிலங்களாகும். பங்களாதேஷ், மலேசியா, ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் இலங்கை சின்ன வெங்காயம் இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாகும்.

தற்போது, திண்டுக்கல், திருச்சி, பெரம்பலூர் மற்றும் திருப்பூர் சந்தைகளில் சின்னவெங்காயம் வரத்து அதிகமாக உள்ளதால் இதன் பண்ணை விலையை பாதிக்கும். திண்டுக்கல் சந்தையில் தரமான சின்ன வெங்காயத்தின் விலைகிலோ ரூ.25 க்கு விற்கப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 12ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது.

ஆய்வு முடிகளின் அடிப்படையில், தரமான சின்ன வெங்காயத்தின் விலைமார்ச்– ஏப்ரல், 2016 மாதங்களில் கிலோவிற்கு ரூ.22 முதல் ரூ.24வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் சின்ன வெங்காய விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**

உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி -0422-2431405

**<u>தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசிஎண் - 0422-6611374 / 6611283

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்